## இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதகைளிலிருந்து தெரிவதும், எனது சிறந்த தகவல்களிற்கும் எனக்களிப்பட்ட விளக்கங்களின்படியும், 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன், இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக்கூற்றுக்களில் விளையும் தாக்கங்ளைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையின் நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் தொழிற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கிணங்க, தயாரிக்கப்பட்டிருந்தன என்று நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதிலான தாமதம்

பீஈடீ/12 ஆம் மற்றும் 2003 யூன் 02 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 92 நாட்கள் தாமதித்து சபையின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ஊழியர்களின் மொத்தச் சம்பளத்திற்குப் பதிலாக தொடக்கச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு பணிக்கொடை கணிப்பிடப்பட்டதனால் மீளாய்வாண்டிற்கான ஏற்பாட்டிற்கான ஒதுக்கம் ரூபா 253,730 குறைத்து மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**1.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் விடயங்களை அவை ஒவ்வொன்றிற்கும் எதிராகக் குறிப்பிடப்பட்ட சான்றுகள் கிடைக்காமையால் அவற்றினை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்யவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துக்கள் | 44,246,387 | நிலையான சொத்துக்கள் பதிவேடு |
| (ii) | 23 பேரேட்டுக் கணக்குகள் | 2,227,866 | பல வருடமாக முன்கொண்டு வரப்படும் மீதியை ஆய்வுசெய்வதற்காக எத் தகவல்களும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

**1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1973 இன் 15 ஆம் இலக்க இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு பிரச்சாரச் சபை அதிகாரச்சட்டம் | பின்வரும் நோக்கங்களை எய்துவதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

(i) அரசாங்கத்தினால் தயாரிக்கப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இணங்க சமூகப் பொருளாதார அபிவிருத்திக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரசசார்பற்ற முகவர்களிடமிருந்து உதவி பெறுதல்

(ii) சர்வதேச தேசிய பட்டினி ஒழிப்பு அமைப்புக்கள் மற்றும் ஏனைய அவற்றை ஒத்த வெளிநாட்டு நிறுவக அமைப்புகள் அல்லது சங்கங்களுடன் ஒத்துழைத்தல்.

| | |
|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசு நிதிப்பிரமாணங்கள் | |
| நி.பி. 371(2) | ‘‘குறித்த பணி’’ உப கட்டுநிதியாக ஒரு சந்தாப்பத்தின் போது ரூபா 20,000 இற்கு மேற்படாத தொகையை நிறைவேற்று உத்தியோகத்தர் மாத்திரம் பெற்றுக்கொள்ள முடியுமான போதிலும் 07 நிறை வேற்றுத்தரமல்லாத உத்தியோகத்தர்களுக்காக ரூபா 20,000 படி முற்பணத் தொகை வழங்கப்பட்டிருந்தது. |
| நி.பி.1645 | மீளாய்வாண்டின் போது எந்த வாகனம் தொடர்பாகவும் சம்பவக்குறிப்பேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 01/2002 ஆம் இலக்க 2002 பெப்ரவரி 25 ஆம் திகதிய அரச நிருவாக சுற்றறிக்கை 9.3.1 பந்தி | நிறுவகத்தின் உத்தியோகபூர்வப் பெயர் சபைக்குரிய வாகனங்களில் பொறிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 13/2008 ஆம் இலக்க 2008 யூலை 28 ஆம் திகதிய அரச நிருவாக சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தி | (i) | முன்னாள் பெண் தலைவருக்கான எரிபொருட் கொடுப்பனவு ரூபா 13,140 ஆன போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 20,700 படி 3 மாத காலத்தின் போது ரூபா 62,100 தொகையான எரிபொருள் பெறப்பட்டிருந்தது. |
| | | (ii) | மீளாய்வாண்டின் யூலை மாதம் வரை முன்னாள் தலைவரால் ரூபா 107,253 பெறுமதியான மேலதிக எரிபொருள் பெறப்பட்டிருந்ததுடன் இதற்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2003 யூன் 2 இன் பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை<br>---------------------------------------------- | | |
| | 5.2.1 ஆம் பிரிவு | | மீளாய்வாண்டிற்காக பாதீடடப்பட்ட கணக்குகள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| | 4.3 ஆம் பிரிவு4 கணக்காய்வு | | பணிப்பாளர் சபைக் கூட்ட அறிக்கைகள் வரிசை அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| | 7.4.1 ஆம் பிரிவு | | 4 கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக 2 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. |
| | 6.5.3 ஆம் பிரிவு | | சபையினால் 2000 ஆம் ஆண்டு முதல் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2006 கொள்வனவு வழிகாட்டி கோவையின் 2.14.1 ஆம் பந்தி | (i) | ரூபா 100,000 இற்கு குறைவானதும் ரூபா 50,000 இற்கு மேற்பட்டதுமான கொள்வனவுகளுக்காக ஆகக் குறைந்தது 3 விலை மனுக்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இந் நிறுவகத்தினால் ரூபா 75,355 பெறுமதியான பொருட் கொள்வனவுகளுக்காக 02 சந்தர்ப்பங்களின் போது அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. |
| | | (ii) | நேரடிக் கொள்வனவிற்கான அதிகாரப் பொறுப்பு தொடர்பாக கவனம் செலுத்தப்படாது ரூபா 10,355 பெறுமதியான நிறைவேற்றுக் கதிரை ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவு ரூபா 314,771 தேறிய மிகையானதுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 2,258,334 ஆனமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 2,573,105 தொகையான முன்னேற்றம் காண்பிக்கப்பட்டது. அரசாங்க மானியங்களில் ரூபா 2,380,902 பெறுமதியான அதிகரிப்பும் ஏனைய செயற்பாட்டு வருமானங்களில் ரூபா 5,564,268 தொகையான அதிகரிப்பும் நிதிசார் விளைவுகளின் முன்னேற்றத்திற்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தன.

**2.2 செயலாற்றல் மீளாய்வு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டு அறிக்கை அச் செயற்பாட்டுத் திட்டத்துடன் பரீட்சிக்கக் கூடியவகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட மொனறாகலை மாவட்டத்தின் தேசிக்காய் விற்பனை செய்யப்படும் பிரச்சனையைத் தீர்க்கும் செயற்திட்டம் 2010 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்தின் பிரதான செயற்திட்டமாக இனங்காணப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டம் மீளாய்வாண்டில் செயற்பட்டிருக்கவில்லை.

(இ) செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிராத பின்வரும் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

| **செயற்திட்டம்** | **செலவினம்** |
|---|---|
| | **ரூபா** |
| ஒரு கிராமம் - ஒரு பயிர் நிகழ்ச்சித்திட்டம் | 973,963 |
| பழங்களிலிருந்து உப உற்பத்தி தொழிற்சாலை ஒன்றை ஆரம்பித்தல் | 794,453 |

**2.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

2007 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட இந்திகட்டு வாவி மற்றும் வெலி வாவி போன்ற இரு வாவிகளில் மதகுகள் தயாரிக்கப்படுவதற்கும் கால்வாய் அணைகள் அமைப்பதற்குமாக ஏற்பாட்டுத்தொகையான ரூபா 454,746 தொகை வேறு செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தமையால் அவ் வேலைகள் மீளாய்வாண்டின் போதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

-------------------------------------------

அமைச்சிற்கும் திணைக்களத்திற்கும் சொந்தமான 10 வாகனங்கள் 07 வருட காலமாக நிறுவகப் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அவ் வாகனங்களைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.5 மனித வள முகாமைத்துவம்**

----------------------------------------

அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 45 ஆன போதிலும் உள்ளபடியான பதவியணி 33 ஆனமையால் வெற்றிடமாக உள்ள ஊழியர் எண்ணிக்கை 12 ஆகக் காணப்பட்டது. இதற்கு மேலதிகமாக அங்கீகாரம் இன்றி அமைய ஊழியர்கள் 95 பேரும் சேர்க்கப்பட்டிருந்தனர்.

**2.6 கூட்டுத்திட்டம்**

-----------------------

2010 – 2012 ஆம் ஆண்டுகள் தொடர்பாக கூட்டுத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதனைத் தயாரிக்கையில் பீஈடீ/12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை 5.1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.7 பாதீட்டு கட்டுப்பாடு**

-----------------------------

பாதீடு செய்யப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே (4.2%) முதல் 402% வரையான முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு முறையான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான பலவீனங்கள் எனது அறிக்கையின் மூலம் அவ்வப்போது சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றனது.

(அ) நிதிக்கூற்றுக்கள்

(ஆ) வாகனக் கட்டுப்பாடு

(இ) ஊழியர் முகாமைத்துவம்

(ஈ) சொத்துக்கள்